## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.235/2020

நாள்: 04.03.2026

வா.சா.1– பாண்டியன்

2026–ம் ஆண்டு மார்ச்04–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சூரியமணல் கிராமத்தில் ரோட்டு ஓரமாக வசித்து வருகிறேன். நான் படிக்கவில்லை. என் மனைவி பெயர் வளர்மதி. என் மனைவியின் சகோதரி சுந்தராம்பாள் என்றால் சரிதான். சந்தராம்பாளின் மகள் சரிதா என்றால் சரிதான். சரிதாவின் கணவர் தான் 1ம் பிரதிவாதி ராஜா என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதியின் சின்ன மாமனார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1–ல் கண்ட முதல் சாட்சி சின்னதுரை 1ம் பிரதிவாதியின் தாய்மாமன் என்றால் சரிதான். 2வது சாட்சி 1ம் பிரதிவாதியின் பங்காளி என்றால் சரிதான். வா.சா.ஆ.1–யை தட்டச்சு செய்த பால்ராஜ் சிதம்பரத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி பால்ராஜ் தற்போது ஜெயங்கொண்டத்தில் இல்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.1–யை தயார் செய்தவர் வழக்கறிஞர் வீராசாமி என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் பணிபுரியவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1–க்கான முத்திரைத்தாள் திருச்சியில் வாங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. முத்திரைத்தாளை ஜெயங்கொண்டம் சிவன் கோவில் தெருவில் வாங்கினேன். ஜெயங்கொண்டம் சிவன் கோவில் தெருவில் முத்திரை தாளை யார் விற்றார் என்ற விவரம் முத்திரைத்தாளில் இல்லை என்றால் சரிதான். பத்திரத்தை யாரிடம் வாங்கினேன் என்றால் தெரியாது. அவர் சைக்கிள் கம்பெனி வைத்திருந்தார். கையெழுத்து செய்து கொடுத்து தான் பத்திரம் வாங்கினேன். வா.சா.ஆ.1–ல் என்

பெயர் எழுதியிருக்கும் மைக்கும் தேதி, பத்திர எண் எழுதப்பட்டுள்ள மைக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். பத்திர விற்பனையாளரை சாட்சியாக விசாரிக்க தாயராக இருக்கிறேன். வா.சா.ஆ.1 முத்திரைத்தாளை K.சிவா எண்.3, இ.சா.பா. அலுவலகம், டவுன்ஹால் திருச்சி 2 என்ற நபரிடம் வாங்கப்பட்டுள்ளது என்றாலும் ஜெயங்கொண்டத்தில் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–யை நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து ஜோடித்து கொண்டதால் தான் பத்திர விற்பனையாளரின் விபரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முத்திரைத்தாளில் கருவூல முத்திரையில் எந்தவித விவரமும் தெளிவாக தெரியவில்லை என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் கேட்டு வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது 03.11.2014–ல் 2ம் பிரதிவாதி பெயரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் தெரியாது. 2018–ல் தான் தெரியும். 1ம் பிரதிவாதியிடம் நான் தாவா சொத்துக்குரிய அசல் பத்திரத்தை வாங்கி பார்க்கவில்லை. வா.சா.ஆ.5 ஆவணம் ஈட்டுக்கடன் பத்திரம் என்று யார் என்னிடம் சொன்னார் என்றால் 1ம் பிரதிவாதி சொன்னார். எப்போது சொன்னார் என்றால் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும்போது சொன்னார். வா.சா.ஆ.5 ஆவணம் கிரையப் பத்திரம் என்றாலும் ஈட்டுக்கடன் பத்திரம் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரையப் பத்திரத்தில் ரூ.29,38,355/–க்கு கிரையம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் வழக்கில் ரூ.9.50 லட்சத்துக்கு வா.சா.ஆ.1–யை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 2014–ல் கிரையம் வாங்கிய பிறகு வா.சா.ஆ.1–யை நானும் 1ம் பிரதிவாதியும் ஜோடித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தை பொறுத்து பரிகாரம் கோராமல் தவறாக பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு 5 ½ ஆண்டுகள் கழித்து தான் வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் நான் சென்று

கிரையம் கேட்டதாக எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். நான், 1ம் பிரதிவாதி மற்றும் சாட்சிகள் உறவினர் என்பதால் முன் தேதியிட்ட பத்திரத்தை ஜோடித்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் கிரையப் பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்பதற்கு எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்துக்கொண்டு 2ம் பிரதிவாதியின் கிரையத்தை அழிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டை காலி செய்யக்கேட்டு 2ம் பிரதிவாதி வழக்கு போட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டை காலி செய்வது தொடர்பாக புகார் கொடுத்து காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்ற விவரம் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து வில்லங்கம் பார்த்து 25.12.2013–ல் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு அதன் பிறகு கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. நான் 1ம் பிரதிவாதியை 2 மாதத்திற்கு ஒரு முறை ரோட்டில் பார்த்து பேசிவிட்டு வருவேன். இந்த வழக்கு சம்மந்தமாக நான் 1ம் பிரதிவாதியிடம் எதுவும் கூறுவதில்லை. நான் சொல்வதுபோல் கிரைய உடன்படிக்கை ஏற்படவில்லை என்றாலும் வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.